## February 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா-அமெசிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான விதிமுறைகளை இறுதி செய்வதற்காக அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெறவிருந்த இருதரப்பு பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

(i) இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பளித்தது மற்றும் அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் மீது புதிய சீரான 15 சதவீத வரியை செவ்வாய்க்கிழமை (பிப்.24) அமலுக்கு வரும் வகையில் டிரம்ப் விதித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ii) இது குறித்து வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் மேலும் கூறுகையில், வரி விதிப்பு மீதான அமெரிக்க உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு மற்றும் அதன் பிறகு அமெரிக்க அரசு நிர்வாகம் எடுத்துள்ள நீடவடிக்கைகளின் தாக்கம் குறித்து ஆராய்வதற்கு அவகாசம் தேவை என்பதால், இடைக்கால வர்த்தக ஒப்பந்த விதிமுறைகளை இறுதி செய்ய வாஷிங்டனில் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெற விருந்த இருதரப்பு பேச்சுவார்த்தையை ஒத்திவைப்பது என இரு நாடுகள் சார்பிலும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் வசதியான வேறு தேதியில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும்' என்றனர்.

(iii) அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை டிரம்ப் பதவியேற்றதும், இந்தியா உள்பட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று அமெரிக்க உச்சநீதி மன்றம் பிப்ரவரி 20-ஆம் தேதி தீர்ப்பளித்தது. இது, டிரம்ப் நிர்வாகத்துக்கு பெரும் பின்னடைவானது.

(iv) இந்தத் தீர்ப்பை மீறி, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது புதிய சீரான 15 சதவீத பரஸ்பர வரியை டிரம்ப் வெள்ளிக்கிழமை விதித்தார். இதுதொடர்பாக, டிரம்ப் கையொப்பமிட்ட பிரகடனத்தை அமெரிக்க அதிபர் அலுவலகமான வெள்ளை மாளிகை வெளியிட்டது.

(v) இந்த நிலையில், வரி விதிப்பு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பு காரணமாக நாட்டின் பொருளாதார சரிவு தொடர்வதால் உலக நாடுகள் மீதான 10 சதவீத பரஸ்பர வரி, 15 சதவீதமாக உயர்த்தப்படும். அவ்வாறு, உலக நாடுகள் மீது உயர்த்தப்பட்ட புதிய வரிகள் தொடர்பான விவரத்தை அமெரிக்க நிர்வாகம் அடுத்த சில மாதங்களில் வெளியிடும் என்று டிரம்ப் சனிக்கிழமை அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

2.சுதந்திர இந்தியாவின் முதலாவது மற்றும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரல் ஆன சி.ராஜகோபாலாச்சாரியைப் போற்றும் வகையில் அவரது சிலை குடியர சுத்தலைவர் மாளிகை வளாகத்தில் திங்கள்கிழமை (பிப்ரவரி 23) திறக்கப்படவுள்ளது. இந்திய விடுதலை மற்றும் சுதந்திர இந்தியாவில் அவரது பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வகையில் ராஜாஜி உத்சவ் என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் அங்கமாக ஒரு கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

(i) மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் ஆங்கிலேயர் புகழ் போற்றும் அடையாளங்கள் மற்றும் சின்னங்கள் மெல்ல, மெல்ல விலக்கிக் கொள்ளப்பட்டு சுதந்திர இந்தியாவில் பெரிதும் போற்றப்படாத தலைவர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் உள்ளிட்டோரை கௌரவிக்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ii) இதன் அங்கமாக தலைநகர் தில்லியில் ஆங்கிலேயர் கால கட்டடங்கள் மெல்ல, மெல்ல அகற்றப்பட்டு சென்ட்ரல் விஸ்டா என்ற பெயரில் மத்திய கட்டட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சேவா தீர்த்தம், கடமை பவன் போன்ற பெயர்களில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அவற்றில் ஏற்கெனவே மத்திய அமைச்சரவைச் செயலகம், பிரதமர் அலுவலகம், உள்துறை, வெளியுறவுத்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் அலுவலகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

(iii) இந்நிலையில், தில்லியின் முக்கிய அரசுக் கட்டடங்கள் அமைந்த செளத் பிளாக், நார்த் பிளாக், குடியரசுத்தலைவர் மாளிகை உள்ளிட்ட கட்டடங்களை கட்டிய பிரிட்டிஷ் கட்டடக் கலைஞர் எட்வின் லூட்யன்ஸ் நினைவாக குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அவரது சிலை அகற்றப்பட்டுள்ளது. அந்த இடத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வழக்கத்தில் இருந்த கவர்னர் ஜெனரல் பதவி வகித்த கடைசி கவர்னர் ஜெனரலான சி.ராஜகோபாலாச்சாரியின் சிலை நிறுவப்பட்டுள்ளது. திறப்பு விழா திங்கள்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

(iv) இதில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(v) ராஜாஜிக்கு சிலை ஏன்?:

தமிழ்நாட்டின் அப்போதைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூர் தாலுகாவின் தொரப்பள்ளி கிராமத்தில் 1878-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி பிறந்த ராஜாஜி, மகாத்மா காந்தியின் ஆரம்பகால அரசியல் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராக விளங்கினார். ரௌலட் சட்டத்துக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்த அவர், வைக்கம் சத்தியாகிரகம், உப்பு சத்தியாகிரகம் என தொடர்ச்சியாக பிரிட்டிஷ் கொடுங்கோன்மை மற்றும் ஆட்சிக்கு எதிராக குரல் கொடுத்து போராட்டங்களில் பங்கெடுத்தார்.

(vi) 1937-இல் மதராஸ் மாகாணத்தின் முதன்மை அமைச்சராகத் தேர்வாகி 1940-ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். அப்போது வி.எம். முனுசாமி என்ற பட்டியலினத்தவரை ஹிந்து அறநிலையத் துறை அமைச்சராக நியமித்தார். ஜெர்மனிக்கு எதிரான போரை பிரிட்டிஷ் தொடுத்த காலத்தில் மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு போராட்ட முடிவுக்கு ராஜாஜி எதிர்ப்பு தெரிவித்தார். முகமது அலி ஜின்னா மற்றும் அகில இந்திய முஸ்லிம் லீக்குடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுகாண முற்பட்டதையடுத்து அவரது திட்டம் 'சி.ஆர். ஃபார்முலா' என அப்போதைய அரசியல் உலகில் அழைக்கப்பட்டது.

(vii) 1946-இல் அமைந்த இடைக்கால அரசில் மத்திய தொழிற் சாலைகள், கல்வி, நிதித் துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட ராஜாஜி, 1947-48 இல் மேற்கு வங்க ஆளுநராகப் பணியாற்றினார். 1948-ஆம் ஆண்டு, ஜூன் 21 முதல் 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் தேதிவரை சுதந்திர இந்தியாவின் முதலாவது மற்றும் கடைசி கவர்னர் ஜெனரலாக ராஜாஜி பணியாற்றினார்.

(viii) 1951-54-இல் மதராஸ் மாகாண முதல்வராகவும் இருந்தார். நேருவின் சோஷலிஸ பாணி பொருளாதார கொள்கைகளுடன் கடுமையாக முரண்பட்டதால் 1959- இல் இந்திய தேசிய காங்கிரஸில் இருந்து விலகிய ராஜாஜி, சுதந்திரா கட்சியைத் தொடங்கி 1962, 1967, 1971 தேர்தல்களில் காங்கி ரஸுக்கு எதிராகப் போட்டியிட்டார்.

(ix) காங்கிரஸுக்கு எதிரான ஐக்கிய முன்னணி அண்ணாதுரை தலைமையில் அமைவதில் முக்கிப் பங்கு வகித்தவர் ராஜாஜி. பின்னாளில் அண்ணாதுரை தலைமையில் தமிழ்நாட்டில் (மதராஸ் மாகாணம்) 1967-இல் ஆட்சி அமைந்தது. ராஜாஜி தனது 94-ஆவது வயதில் 1972-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி காலமானார்.

3. வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே முதலாவது எல்லைத் தூண் நிறுவப்பட்டது.

(i) இது, இரு மாநில எல்லைப் பிரச்னைக்கு தீர்வுகாணும் நம்சாய் பிரகடன அமலாக்கத்தின் குறிப்பிடத்தக்க படிக்கல்லாகும்.

(ii) அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே பல்லாண்டுகளாக நிலவும் எல்லைப் பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் கடந்த 2022-இல் நம்சாய் பிரகடனம் கையொப்பமிடப்பட்டது. அதன்படி, இரு மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கள ஆய்வு, வரலாற்றுரீதியான ஆவணங்கள் ஆய்வு, உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடல்களின் மூலம் சுமுக முடிவை எட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பலனாக, செய்ஜோசா எல்லைப் பகுதியில் இரு மாநிலங்களுக்கும்

இடையிலான முதல் எல்லைத் தூண் நிறுவப்பட்டது. இரு மாநில அரசு அதிகாரிகள், காவல் துறையினர், சமூகத் தலைவர்கள், கிராமத் தலைவர்கள் முன்னிலையில் இந்தத் தூண் நிறுவப்பட்டது.

(iii) இது, எல்லைப் பிரச்னை தீர்வு நடைமுறையில் வரலாற்று மைல்கல் என்று அருணாசல பிரதேச முதல்வர் பெமா காண்டு தெரிவித்தார்.

4. தன்மறைப்பு கொள்கைக்கு எதிராக இந்திய போட்டி ஒழுங்காற்று ஆணையம் (சிசிஐ) விதித்த ரூ.213.14 கோடி அபராத்தை எதிர்த்து மெட்டா மற்றும் வாட்ஸ்ஆப் தொழில்நுட்ப நிறுவனங்கள் தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்றத்தில் திங்கள்கிழமை (பிப்.23) விசாரணைக்கு வருகிறது.

(i) விளம்பர நோக்கத்துக்காக தாய் நிறுவனமான மெட்டா உடன் பயனர்களின் தரவுகளை 5 ஆண்டுகளுக்குப் பகிர்ந்துகொள்வது என்ற வாட்ஸ்ஆப்பின் தன்மறைப்பு கொள்கைக்குத் தடைவிதித்த சிசிஐ, அந்த நிறுவனத்துக்கு ரூ.213 கோடி கோடி அபராதம் விதித்தது.

(ii) இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த தேசிய நிறுவனங்கள் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (என்சிஎல்ஏடி), இந்திய போட்டி ஒழுங்காற்று ஆணையம் விதித்த தடையை நீக்கியது. ஆனால், அபராதத் தொகையை கட்ட வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. வாட்ஸ்ஆப்பின் தன்மறைப்பு மற்றும் ஒப்புதல் விவகாரம், விளம்பரம் மற்றும் விளம்பரம் சாராத நோக்கங்களுக்காக பயனர்களின் தரவுகளைச் சேகரிப்பதற்கும் பொருந்தும் என என்சிஎல்ஏடி விளக்கமளித்தது.

(iii) இந்நிலையில், சிசிஐ விதித்த அபாரத்துக்கு எதிராக இரு தொழில்நுட்ப நிறுவனங்களும் தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வருகிறது.

(iv) முன்னதாக, கடந்த பிப்.3-ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின் போது இரு தொழில்நுட்ப நிறுனங்கள் மீது கடும் விமர்சனத்தை முன்வைத்த உச்சநீதிமன்றம், 'தரவுகளை பகிர்தல் என்ற பெயரில் குடிமக்களின் தன்மறைப்பு உரிமையோடு விளையாடுகின்றனர். சந்தையில் முற்றுரிமையை உருவாக்கி வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகnவலை திருடி வருகின்றனர்' எனக் குற்றஞ்சாட்டியது.

(v) இந்த வழக்கில், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் ஒரு மனுதாரராக சேர்த்துக்கொள்ள பிப்.9-ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின் போது நீதிமன்றம் உத்தரவிட்டது.

(vi) வாட்ஸ்ஆப் மற்றும் மெட்டா பயனர்களின் தரவுகளை பகிர்ந்து கொள்ள அனுமதித்து என்சிஎல்ஏடி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சிசிஐ தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் விசாரித்து வருகிறது.

5. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் - தீவிரமான வர்த்தகக் கொள்கைகள் :-

(i) புதிய உலகளாவிய வரிகளை விதித்தல்

- இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10% பரஸ்பர வரி விதிக்கும் புதிய அறிவிப்பில் ஜனாதிபதி டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.
- இந்த புதிய வரி பிப்ரவரி 24, 2026 (செவ்வாய்கிழமை) முதல் அமலுக்கு வர உள்ளது.
- ஆரம்ப அறிவிப்பில் இந்த வரி 150 நாட்களுக்குப் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- பாரம்பரிய சட்டமன்ற தடைகளைத் தவிர்ப்பதற்காக 1974 ஆம் ஆண்டு வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122 இன் கீழ் டிரம்ப் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

(ii) இந்த அறிவிப்பு 10% வரியிலிருந்து பல முக்கியமான வகை பொருட்களை விலக்குகிறது, அவற்றுள்:

- அத்தியாவசிய கனிமங்கள் மற்றும் ஆற்றல்: குறிப்பிட்ட கனிமங்கள், தங்கம், வெள்ளி மற்றும் எரிசக்தி

பொருட்கள்/எரிபொருள்கள்.

- உணவு மற்றும் ஆரோக்கியம்: மாட்டிறைச்சி, தக்காளி, ஆரஞ்சு, மருந்துகள் மற்றும் மருந்துகளுக்கான மூலப்பொருட்கள்.
- போக்குவரத்து: பயணிகள் வாகனங்கள், இலகுரக மற்றும் கனரக வாகனங்கள், பேருந்துகள் மற்றும் குறிப்பிட்ட விமான பாகங்கள்.

(iii) நீதித்துறை மோதல் மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு

- நீதிமன்ற தீர்ப்பு: அமெரிக்க உச்ச நீதிமன்றம், 9 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் தீர்ப்பில், டிரம்பின் ஒருதலைப்பட்ச வரி விதிப்பு செல்லாது என்று அறிவித்தது.
- அரசியலமைப்பு அடிப்படை: வரிகளை விதிக்கும் அதிகாரம் அமெரிக்க காங்கிரஸுக்கு மட்டுமே உள்ளது என்றும், இந்த விஷயத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக செயல்பட முடியாது என்றும் ஒன்பது நீதிபதிகளில் ஆறு பேர் தீர்ப்பளித்தனர்.
- டிரம்ப் தனது "உண்மை சமூக" தளத்தில் தீர்ப்பை விமர்சித்து, அமெரிக்காவிற்கு "விரோதமானது" மற்றும் "நியாயமற்றது" என்று முத்திரை குத்தினார்.
- தீர்ப்பு இருந்தபோதிலும், "எதுவும் மாறாது" என்றும், திட்டமிட்டபடி வரிகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பிற சட்ட முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்துவேன் என்றும் டிரம்ப் வலியுறுத்தினார்.

(iv) இந்திய-அமெரிக்க வர்த்தக உறவுகளில் தாக்கம்

- முன்னதாக, இந்தியப் பொருட்களுக்கு 25% வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் அச்சுறுத்தியிருந்தார்.
- நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, பிப்ரவரி 7 அன்று ஒரு இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது, இது இந்தியப் பொருட்களின் மீதான பரஸ்பர வரியை 18% ஆகக் குறைக்க முன்மொழிந்தது.
- டிரம்ப் "நியாயமான வர்த்தகம்" என்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறார், இந்தியா அமெரிக்காவிற்கு வரி செலுத்தும் என்று கூறுகிறார், ஆனால் அமெரிக்கா இந்தியாவிற்கு இதே போன்ற வரிகளை செலுத்தாது, இது முந்தைய "நியாயமற்ற" நடைமுறைகளின் தலைகீழ் மாற்றமாக விவரிக்கிறது.

(v) இந்திய அரசாங்கத்தின் எதிர்வினை

- இந்திய ஏற்றுமதிகளில் ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பிடுவதற்காக அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், அதைத் தொடர்ந்து டிரம்பின் நேர்காணல்களையும் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்திய அரசாங்கம் தற்போது இந்த முன்னேற்றங்களின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து வருகிறது, இதன் மூலம் அதன் அடுத்த இராஜதந்திர மற்றும் பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிக்க முடியும்.

அமெரிக்கா ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தடுக்க நீதித்துறை அமைப்பு முயற்சித்தாலும், டிரம்ப் தனது "அமெரிக்கா முதலில்" பொருளாதார நிகழ்ச்சி நிரலில் உறுதியாக இருக்கிறார், இது உலகளாவிய வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை உருவாக்குகிறது